1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 484, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

484—

முல்லி முனையில் புயல் காப்பகம்.

*2108—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முல்லிமுனையில் புயல் காப்பகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விரைவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கட்டிடம் கட்டுவது எப்போது என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்களைக் கட்டுவதற்காக ஏற்கனவே வத்திராயிருப்பு, கீழையூர், முல்லி முனை ஆகிய ஊர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதற்குப் பின்னாலே, வத்திராயிருப்பு பகுதியை ஆய்வு செய்கின்ற நேரத்திலே, வத்திராயிருப்பை ஒட்டி இன்றைக்குக் கடலோரப் பகுதி இல்லாதிருந்த காரணத்தினாலே அதை நீக்கிவிட்டு வேறு ஒரு ஊரைத் தேர்வு செய்ய வேண்டுமென்று நில நிர்வாக ஆணையரிடத்திலே இன்றைக்கு அரசு கேட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அதற்கான ஒரு மாற்று இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அந்த இடத்தோடு சேர்த்து, மூன்றும் ஒரே ஆணையின் கீழ் வெளியிடப்பட்ட காரணத்தினாலே, அந்த மூன்று இடங்களையும் ஒரே நேரத்திலே எடுத்துச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அந்த உரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கீழையூர், முல்லிமுனையையும் சேர்த்து இந்த மூன்று இடங்களிலும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.